**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 69/2018 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. விஸ்வநாதன் | CASTE | : | |
| S/O. | ரமணி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | பாலமேடு | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 02.04.2025

**குறுக்கு விசாரணை:**

1. எனது பூர்வீக ஊர் திருச்சி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம். தாவா சொத்து உள்ள கிராமத்திற்கு 2018ம் ஆண்டு குடிவந்தோம். பாலமேடு கிராமம் எப்போது வரை ஊராட்சியாக இருந்தது, எப்போது நகராட்சியாக மாறியது என்று எனக்குத்தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது, நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி ஐயரிடம் வாதியின் தாத்தா வழக்குச்சொத்தை எந்த வருடம் கிரையம் பெற்றார் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1120 சதுரடி என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தின் புலவரைபடம்பற்றியும் அதிலுள்ள விஸ்தீரணம் பற்றி எனக்குத்தெரியாததால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3. வாதி தரப்பு வழக்குரையையும் அதிலுள்ள சொத்து விவரம் மற்றும் நான்குமாலை நான் படித்துப்பார்த்தேன். வழக்குரையின் சொத்து விவரத்தில் கிழக்குப்புறம் தென்வடல் வீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீதி 20 அடி நீளம் மற்றும் சுமார் 500 மீட்டர் நீளம் இருக்கும். தாவா சொத்தின் கிழக்கே 3 அடி அகலமுள்ள சந்து மட்டும்தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரை தாவா சொத்தின் சர்வே எண் 849/40A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தை அளந்த நாளன்று நான் அங்கு இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது இடத்தில் அரசிடம் முறையாக அனுமதி பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தையும், பிரதிவாதிகள் சொத்தையும் பிரித்துக்காட்ட 2க்கும் இடையே 3 அடி சந்து உ ள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3

அடி அகலம் 32 அடி நீளம் கொண்ட பில்லர் போட்ட கிழமேல் சுவர் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5. மேற்படி 3 அடி அகல வாதியின் கிழமேல் சுவற்றுக்கும் பிரதிவாதிகளின் வீட்டின் சுவற்றின் இடையே 3 அடி சந்து உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பில்லர் வைத்த சுவர் இன்றும் வழக்குச்சொத்தில் உள்ளது. வழக்குச்சொத்தின் பழைய சர்வே எண் 101/1A. பழைய சர்வே எண் 101 என்பது தற்போது 41 சப்டிவிசனாக பிரிந்துள்ளது, என்பதை வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 2018 ல் என்ன விலை பெறும் என்றால் எனக்குத்தெரியாது.

6. தாவா சொத்து வழக்குத்தாக்கல் செய்தகாலத்தில் 1 செண்டு 10 இலட்சம் ரூபாய் விலைபோகும் என்பதை வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வாதிகளிடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்ய அவசியமில்லை, அவர்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகளிடத்தில் 914 சதுரடிக்கு மட்டும்தான் பட்டா கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பட்டாவை நான் பார்க்கவில்லை. பட்டாவை பார்க்காமல் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. வாதியின் பிராதில் 3 அடி அகலம் 35 அடி நீளமுள்ள பில்லர் வைத்த சுவர் பற்றி சொத்து விவரத்தில் சொல்லாமல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2014ம் வருடம் ஆவண எண் 3472 படி சர்வே எண் 849/40B3 இருந்த செண்டிரிங் காரை வீட்டையும் அதனுடைய முந்தைய உரிமையாளரிடமிருந்து ஆவண எண்கள் 2725 மற்றும் 3422/2017 கிரையம் பெற்று மற்றும் புதிய சர்வே எண் 849/41 ல் கண்ட 920 சதுரடி கிரையம் பெற்று வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே முறையான அனுமதி பெற்று கட்டிடம் கட்டி அனுபவித்து வருவதை மறைத்து பொய்யான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் வாதிக்கு ஆதரவாக வாதியின் பவர் ஏஜெண்ட் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**//True copy//**
**Sd/-M.Ramkishore**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**வாடிப்பட்டி.**